ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:




(உறையூர் “நம்நாச்சியார்” கமலவல்லி)

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஏழாம் அத்யாயம்)
இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

7.1 வ்யாசக்ஷே அஹம் தத் சக்ர க்ரம சஸ்தத்வ பத்ததிம்
சுத்த அசுத்த விமிச்ரேயம் தத்வ பத்ததி: உச்யதே

**பொருள் -** மஹாலக்ஷ்மி இந்திரனிடம், “சக்ரா! அடுத்து உனக்கு தத்துவங்களின் உற்பத்தி குறித்தும், அவற்றின் நிலைகள் குறித்தும் கூறுகிறேன். இத்தகைய உற்பத்தி என்பது தூய்மையானதும் அசுத்தமானதும் கலந்ததே ஆகும்”, என்று கூறத் தொடங்கினாள்.

7-2 நிரம்போதாம்ப: ஆபாஸோ நிஷ்பந்தோததி ஸந்நிப:
ஸ்வச்சஸ்வச்சந்த சைதன்ய ஸதாநந்த மஹோததி:

**பொருள் -** பகவான் பெரிய கடல் போன்று அமைதியாக உள்ளவன், தூய்மையானவன், ஞானமயமானவன், கடல் எவ்விதம் எல்லயற்று உள்ளதோ அதுபோன்று எல்லையற்ற ஆனந்தம் உடையவன் ஆவான்.

7-3 ஆகார தேச காலாதி பரிச்சேத விவர்ஜித:
பகவான் இதி விஜ்ஞேய: பரமாத்மா ஸநாதந:

**பொருள் -** பகவான் ரூபம், இருப்பிடம், காலம் முதலானவைகளால் சூழப்படாதவன் ஆவான். அவன் பழமையானவன். ஆகாயம் போன்று தூய்மையானவன். எப்போதும் இருந்து வரும் பரமாத்மா ஆவான்.

7-4 தஸ்ய அஹந்தா பரா தாத்த்ருக் பகவத்தா ஸநாதநீ
நாராயணீ பரா ஸூக்ஷ்ம நிர்விகல்பா நிரஞ்ஜனா

**பொருள் -** அவனுடைய “நான்” என்ற எண்ணமாக நாராயணீ இருக்கிறாள். அவள் எப்போதும் இருப்பவளாக, ஸூக்ஷ்மமாக உள்ளவளாக, மாற்றம் அடையாதவளாக, தோஷங்கள் அற்றவளாக இருக்கிறாள்.

7-5 ஜ்ஞான சக்தி பல ஐச்வர்ய வீர்ய தேஜோமஹோததி:
ஷண்ணாம் யுகபத் உந்மேஷோ குணானாம் ப்ரதமோ ஹரி:

**பொருள் –** கடல் போன்று எல்லையற்றுள்ள ஆறு குணங்களான ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம் மற்றும் தேஜஸ் ஆகியவை ஒரே நேரத்தில் உந்மேஷ நிலையான முதல்

நிலையில் புகுகின்றன (உந்மேஷ நிலை என்பது கண் விழிக்கின்ற நிலை என்றாலும், இங்கு இயக்க நிலை என்ற பொருளில் வந்தது).

7-6 பவத்பாவாத்மகத்வேந த்விதா ஸ வ்யாபதிச்யதே
 பவம்ஸ்து வாஸுதேவ: அத்ர பாவ: அஸ்மிந் வாஸுதேவதா

**பொருள்** - இப்படியாக உள்ள நிலை "பவத்" என்றும், "பாவ" என்றும் இரு நிலைகளாக உள்ளன (பவத் என்பது இருத்தல், பாவம் என்பது இருக்கும் நிலை). இவற்றில் பவத் நிலை என்பது வாஸுதேவன் எனவும், பாவ நிலை என்பது வாஸுதேவதா எனவும் கூறப்படும்.

7-7 சாந்திர்நாம்நா ஸமாக்யாதா ஸாஹம் தேவீ ஸநாதநீ
 ஸங்கர்ஷணாதயோ வ்யூஹா: ஸாஹந்தா: ப்ராங் நிரூபிதாம்

**பொருள்** - வாஸுதேவதா என்பதே நித்யமாக உள்ள என்னுடன் தொடர்புடையதாக, சாந்தி என்று அழைக்கப்படுவதாக உள்ளது. ஸங்கர்ஷணன் போன்ற மற்ற வ்யூஹங்களின் தத்வம் குறித்து, உனக்கு நான் முன்பே கூறிவிட்டேன்.

7-8 த்ரயச்ச சாதுராத்ம்யம் தச்சத்வர: அமீ ஸுரேச்வர
 ஏதாவத் பகவத் வாச்யம் நிஸ்தத்வம் தத்வம் உத்தமம்

**பொருள்** - மற்ற மூன்று வ்யூஹங்களான ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன் மற்றும் அநிருத்தன் ஆகியவையுடன் சேர்ந்து, இவற்றின் தொகுப்பாக உள்ள வாஸுதேவன் என்னும் நான்கு வ்யூஹங்களும் "பகவான்" என்னும் பெயரால் குறிப்பிடப்படுகின்றன. ஸுரேச்வரனே! மற்ற தத்துவங்களுடன் கலக்காத தூய்மையான தத்துவம் இதுவே ஆகும்.

7-9 நமஸ்து பரமம் வ்யோம பரமாகாச சப்திதம்
 யத்ர தேவோ மயா ஸார்தம் விபஜ்யாத்மாநமாத்மநா
7-10 க்ரீடதே ரமயா விஷ்ணு: பரமாத்மா ஸநாதந:
 ஷாட்குண்யஸ்ய ஸமுந்மேஷ: ஸ தேச: பரமாம்பரம்

**பொருள்** - பரமவ்யோமம் என்று வான்வெளி கூறப்படுகிறது. இதுவே பரமஆகாசம் என்றும் கூறப்படும். அந்த ஆகாயத்தில் மிகவும் உயர்ந்தவனும், நித்யமானவனும், ஆறு குணங்கள் எப்போதும் வெளிப்பட்டபடி உள்ளவனும் ஆகிய மஹாவிஷ்ணு, ரமா

எனப்படும் என்னுடன் விளையாடி மகிழ்ந்தபடி உள்ளான். அந்த இடமே பரமபதம் என்று கூறப்படுகிறது (இந்த பரமபதத்தில் உள்ளது இரண்டாவது தத்வமாகும்).

7-11 புருஷோ போக்த்ரு கூடஸ்த: ஸர்வஜ்ஞ: ஸர்வதோமுக:
அம்சத: ப்ரஸரந்த்யஸ்மாத்ஸர்வே ஜீவா: ஸநாதநா:

**பொருள்** - ஹிரண்யகர்ப்பனான புருஷன் அனுபவிப்பவர்களின் தொகுப்பாகவும், அனைத்தும் அறிந்தவனாகவும், எங்கும் வ்யாபித்தவனாகவும் உள்ளான். எல்லையற்ற காலமாக இருந்து வரும் அனைத்து ஜீவன்களும் அவனது அம்சமாகவே உள்ளனர் (இது மூன்றாவது தத்துவமாகும்).

7-12 ப்ரளயே த்வபியந்த்யேநம் கர்மாத்மநோ நரம் பரம்
இயம் மாத்ருதசா ஸா மே யா தே பூர்வம் மயோதிதா

**பொருள்** – கர்மவசப்பட்ட ஜீவன்கள் அனைவரும் ப்ரளயத்தின்போது பரஸ்வரூபமான நாராயணனுக்குள் சென்று மீண்டும் லயிக்கின்றனர். அனைத்தும் அறிந்த எனது இந்த நிலையைப் பற்றி (மாத்ருதசா) நான் உனக்கு முன்பே கூறினேன் (6-11 முதல் 13, 6-34 முதல் 40).

7-13 மஹாலக்ஷ்மீ: ஸமாக்யாதா சக்திதத்வம் மநீஷிபி:
நியதிஸ்து மஹாவித்யா கால: காளீ ப்ரகீர்த்திதா

**பொருள்** - சக்திரூபமாக உள்ள என்னை அறிஞர்கள் மஹாலக்ஷ்மி என்று போற்றுகின்றனர். நியதி (விதி) என்பது மஹாவித்யா என்றும், காலம் என்பது காளீ என்றும் கூறப்படுகிறது.

7-14 ஸத்த்வம் ரஜஸ்தமச்சேதி குணத்ரயமுதாஹ்ருதம்
ஸுகரூபம் ஸ்ம்ருதம் ஸத்த்வம் ஸ்வச்சம் ஜ்ஞானகரம் லகு

**பொருள்** - மூன்று குணங்களான ஸத்வம், ரஜோ மற்றும் தாமஸம் குறித்து முன்பே கூறப்பட்டது. இவற்றில் ஸத்வம் என்பது இன்பமே வடிவமானது ஆகும். இது தெளிவாகவும் ஞானமயமாகவும் உள்ளதால் லகுவாக உள்ளது.

7-15 துக்கரூபம் ரஜோ ஜ்ஞேயம் சலம் ரக்தம் ப்ரவர்த்தகம்
மோஹரூபம் தமோ ஜ்ஞேயம் குரு க்ருஷ்ணம் நியாமகம்

**பொருள்** - ரஜோ குணம் என்பது துயரமே வடிவானது ஆகும். இது சஞ்சலம் மற்றும் பொறாமையை வளர்ப்பதாகும். சிவந்த நிறத்துடன் உள்ளது ஆகும். மயக்க நிலையில் ஆழ்த்துவது தமோ குணம் ஆகும். இது கறுத்த நிறமாகும். இது சோம்பலை வளர்ப்பதாகவும் உள்ளது.

7-16 மாயா சைவ ப்ரஸூதிச்ச ப்ரக்ருதிச்சேதி வாஸவ
புரஸ்தாத் வ்யாக்ருதம் துப்யம் ததேதத் ப்ரக்ருதி த்ரிகம்

**பொருள்** – வாஸவனே! இந்த உலகைப் படைக்கின்ற மாயா, ப்ரஸூதி மற்றும் ப்ரக்ருதி குறித்து உனக்கு நான் முன்பே கூறி உள்ளேன் (6-43).

7-17 பூதாநி தசஸங்க்யாநி ததா காநி த்ரயோதச
த்ரயோ விம்சதிரப்யேதே ஸூஸ்பஷ்டம் வ்யாக்ருதா புரா

**பொருள்** - பூதாநி என்பது பத்து ஆகும். காநி எனப்படும் இந்த்ரியங்கள் பதின்மூன்று ஆகும். இந்த இருபத்து மூன்று தத்துவங்கள் பற்றி முன்பே தெளிவாக நான் கூறியுளேன் (5-50 முதல் 77).

**விளக்கம்** - பூதாநி என்பது ஸ்தூலமாக உள்ள ஐந்து பூதங்களும், ஸூக்ஷ்மமாக உள்ள ஐந்து பூதங்களும், ஆக பத்து ஆகும். காநி என்பது அந்தகரணம் (மனம், புத்தி, அஹங்காரம்) உட்பட உள்ள இந்திரியங்கள் ஆகும். இந்த மூன்றுடன், ஞான இந்த்ரியங்கள் ஐந்து, கர்ம இந்த்ரியங்கள் ஐந்து எனப் பதின்மூன்று ஆகும். இப்படியாக உள்ள 10 + 13 = 23 தத்துவங்கள் கூறப்பட்டன).

7-18 ததயம் மம ஸங்கோச: ப்ரமாதா சுத்தசிந்மய:
ஸ்வாந்த: ஸ்புரித தத்வேதை: ஸ்திதோ தர்ப்பணவத்ஸதா

**பொருள்** - இப்படியாக அறிந்து கொள்ளவல்ல ஜீவன் எனது சுருக்கமான ஞானத்தை பூர்ணமாக உடையவனாகவும், கண்ணாடி போன்றும் உள்ளான்.

7-19 சாதுரூப்யம் து யத்தஸ்ய ததிஹைகமநா: ச்ருணு
ஆத்யம் சூந்யமயோ மாதா மூர்ச்சாதெள பரிகீர்த்தித:

**பொருள்** - ஜீவனுடைய நான்கு நிலைகலைப் பற்றி நான் கூறப்போவதைக் கவனமாகக் கேட்பாயாக. முதலில் இவன் மூர்ச்சை அடைந்த நிலையைப் போன்று, எதனுடனும் தொடர்பு அற்ற சூந்யநிலையில் (தூரிய நிலை) உள்ளான்.

7-20 தத: ப்ராணமயோ மாதா ஸுஷுப்தெள பரிகீர்த்தித:
ப்ராணா ஏவ ப்ரதாயந்தே ஸுஷுப்தெள புருஷஸ்ய து

**பொருள்** - அந்தப் புருஷனின் மற்றொரு நிலையானது ஆழ்ந்த உறக்க நிலையாகும். இந்த நிலையில் அவன் ப்ராண வடிவில் உள்ளதாகவே கொள்ளவேண்டும். இதன் காரணம் ஆழ்ந்த உறக்கத்தின்போது ப்ராணனை மட்டுமே (சுவாசிப்பது) நம்மால் காண இயலும்.

7-21 மூர்ச்சா விஷோபகாதாதெள ப்ராணோ அபி விநிவர்த்ததே
கேவலம் ஸ்வாத்மஸத்தைவ தத: சூந்யஸ்த்தா பூமாந்

**பொருள்** - மூர்ச்சை அடைந்த நிலை போன்றவைகளில் ப்ராணன் சீராக இருப்பதில்லை. அந்த நிலைகளில் ஆத்மா மட்டுமே அந்த உடலில் உள்ளது. இது போன்ற நிலையில் அந்தப் புருஷன் சூந்ய நிலையில் உள்ளான் என்று அறிய வேண்டும்.

7-22 த்ருதீய: அஷ்டபுரீமாத்ர: ஸ்வப்நே மாதா ப்ரகீர்த்தித:
ப்ராணா பூதாநி கர்மாணி கரணாநி த்ரயோ குணா:

**பொருள்** - புருஷனின் மூன்றாவது நிலையானது ஸ்வப்ந நிலை (கனவு நிலை) எனப்படும். இந்த நிலையில் அவன் எட்டுப் பட்டணங்களை உடையவனாகக் கருதப்படுகிறான். இவை ப்ராணன் (பஞ்சபூதங்கள்), கர்மங்கள் (இந்த்ரியங்கள்), மூன்று குணங்கள் ....(அடுத்த ச்லோகம் காண்க)

7-23 ப்ராக்வாஸநா அவித்யா ச லிங்கம் புரி அஷ்டகம் ஸ்ம்ருதம்
ஸ்வப்நே அந்த:கரணே நைவ ஸ்வைரம் ஹி பரிவர்த்ததே

**பொருள்** - பழைய கர்மங்களின் வாஸனைகள், அவித்யை, ஸூக்ஷ்ம சரீரம் ஆகிய அனைத்தும் சேர்ந்து அஷ்டபுரி எனப்படும். ஸ்வப்ன நிலையில் புலன்களின் உதவியுடன் புருஷன் மிகவும் விருப்பத்துடன் செயல்படுகிறான்.

7-24 சேஷ்டமாந: ஸ்வதேஹேந தேஹீ ஜாக்ரத்ருசாம் கத:
சாதுரூப்யமிதம் பும்ஸ: த்ரைரூப்யம் அபி மே ச்ருணு

**பொருள்** - சரீரத்தில் உள்ள ஜீவன் (தேஹீ) விழிப்பு நிலையில் செல்லும்போது, அவனது செயல்பாடுகள் அனைத்தும் கடினப்பட்டே செய்யும்படியாக உள்ளது. இப்படியாக புருஷனின் நிலை நான்காக உள்ளது என்பதை அறிவாயாக (விழிப்பு, உறக்கம், கனவு நிலை மற்றும் மூர்ச்சை). இனி மூன்றாக உள்ள நிலையை அறிவாயாக.

7-25 ஜ்ஞாநக்ரியா ஸ்வரூபாணாம் ஸங்கோச: த்ரிவிதஸ்து ய:
தஸ்ய தத்தி த்ரிரூபத்வம் தஸ்ய வ்யாக்யாமிமாம் ச்ருணு

**பொருள்** - மேலும் ஜீவன் மூன்றுவிதமான சுருக்கங்களுக்கு உட்படுகிறான். இவை ஞானச்சுருக்கம், செயல்பாட்டுச் சுருக்கம் மற்றும் ஸ்வரூபம் இன்னதென்று உணராத சுருக்கம் ஆகும். இப்படிப்பட்ட மூன்று சுருக்கங்களின் இயல்பை இப்போது கேட்பாயாக.

7-26 மாயயா ஞானஸங்கோச ஆநைச்வர்யாத்ரிகயாவ்யய:
அசக்தேரணுதா ரூபே த்ரிதைவ வ்யபதிச்யதே

**பொருள்** - மாயை காரணமாக ஜீவனின் ஞானமானது சுருக்கம் அடைகிறது. ஐச்வர்யம் குறைவதன் காரணமாக அவனுடைய செயல்பாடுகளில் சுருக்கம் ஏற்படுகிறது. சக்தி அற்றவனாக உள்ளதால் அவன் அணு அளவே உள்ளான் (செயல்பாடுகளில் சுருக்கம் என்பது செயல்களைச் செய்யும் சாமர்த்யம் குறைவாக உள்ளது என்பதாகும்).

7-27 அணு: கிஞ்சித் கரச்சைவ கிஞ்சிஜ்ஞச்சாயமித்யுத
த்வைரூப்யமைகரூப்யம் ச பூர்வமேவ நிரூபிதம்

**பொருள்** - இப்படியாக ஜீவன் மூன்று தன்மைகள் கொண்டவனாக உள்ளான். அவையாவன – அணு போன்ற அளவு, செயல்பாடுகளில் குறையுடன் இருத்தல் மற்றும் சுருக்கம் அடைந்த ஞானம் என்பவை ஆகும். ஜீவனின் ஒன்றான நிலை, இரண்டாக உள்ள நிலை குறித்து உனக்கு நான் முன்பே கூறினேன் (இங்கு ஜீவன் அணு போன்றவன், பரமாத்மா எங்கும் உள்ளவன்; ஜீவனின் செயல்பாடுகள் குறைந்த அளவே, பரமாத்மாவோ ஸர்வக்ருத்; ஜீவனின் ஞானம் சுருக்கமானது, பரமாத்மா ஸர்வஜ்ஞன் என்று ஒப்பு நோக்கவேண்டும்).

7-28 ஏவம் மாத்ருதசா மே அத்ய ஸவிசேஷா ப்ரகீர்த்திதா
அந்த:கரணி கிஞ்சிசைவ தசாம் சக்ராத்ய மே ச்ருணு

**பொருள்** - இவ்விதம் அறிபவனாக உள்ள ஜீவனாக நான் உள்ள தன்மையைக் கூறினேன். சக்ரா! இனி எனது அந்தகரண நிலையைக் கேட்பாயாக. (இங்கு தானே ஜீவனாக உள்ளது போன்று மஹாலக்ஷ்மி கூறுவது காண்க. இது ஏனென்றால், உபநிஷத்தில் – பஹுஸ்யாம் - நான் பலவாக ஆவேன் – என்பதற்கு ஏற்ப ப்ரஹ்மமே பலவாக நின்றது போன்று ஆகும்).

7-29 ஸ்வச்சந்தா ஸம்விதேவாஹம் ஸ்வதச்சேதநதாம் கதா
ஹித்வா சேதநதாம் தாம் சாப்யவரூடா தத: க்ரமாத்

**பொருள்** – நானே உண்மையான ஞானமாக உள்ளேன். ஆயினும் எனது ஸங்கல்பம் காரணமாக நான் சேதனர்களாக நிற்கிறேன். இப்படியாக உள்ள சேதனம் தொடங்கி அசேதனம் வரை சுருக்கம் கொண்டவளாக, எனது இச்சை காரணமாகப் பலவாக நிற்கிறேன்.

7-30 சைத்ய ஸங்கோசநீ சித்தமந்த: காரணமீரிதம்
மநோபுத்தி: அஹங்கார இதி ஏதத் த்ரிதயம் ச தத்

**பொருள்** - சேதனங்களின் சுருக்கத்திற்குக் காரணமாக அந்தகரணம் உள்ளது. இந்த அந்தகரணம் என்பது மூன்று பிரிவுகள் கொண்டதாகும். அவையாவன – மனம், புத்தி மற்றும் அஹங்காரம் என்பவை ஆகும்.

7-31 விகல்ப: அத்யவஸாயச்ச அபி அபிமாநச்ச வ்ருத்தய:
மநோ விகல்பயத்யர்த்தம் அஹங்கார: அபிமந்யதே

**பொருள்** - இவற்றில் மனதின் செயல்பாடு என்பது விகல்பம் என்றும், புத்தியின் செயல்பாடு அத்யவஸாயம் என்றும், அஹங்காரத்தின் செயல்பாடு அபிமானம் என்றும் அறியவேண்டும். இவற்றில் மனமானது விகல்பத்தைப் பற்றிய ஞானம் அடைகிறது. அஹங்காரமானது எந்த ஒன்றையும் “தனது” என்னும் அபிமானத்தை ஏற்படுத்துகிறது.

**விளக்கம்** – ஒரு பொருளைக் குறித்த குழப்பம் (எது சரி, எது தவறு என்று முடிவு எடுத்தல்) போன்றவை விகல்பம் ஆகும். இதில் சரியான முடிவு என்பது அத்யவஸாயம் ஆகும். அந்த முடிவின் பின்னர், அந்தப் பொருள் தன்னுடையது என்ற எண்ணமே அபிமானம் ஆகும்.

7-32 அத்யவஸ்யதி புத்திச்ச சேதநாதிஷ்டிதா ஸதா
புத்தி: அத்யாத்மம் இத்யுக்தா நிர்ணய: அப்யதிபூதிகம்

**பொருள்** - அத்யவஸாயம் என்பதன் மூலம் முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் புத்தி இயங்குவது போன்று தோன்றினாலும், அந்த முடிவு என்பது சேதனனின் உறுதியால் மட்டுமே எடுக்கப்படுகிறது. ஆக புத்தி என்பது ஆத்மாவைச் சார்ந்தது என்றும், அத்யவஸாயம் (முடிவு) என்பது இயற்கையைச் சார்ந்தது என்றும் கொள்ளவேண்டும்.

7-33 புத்திதர்ப்பண ஸம்லீந: க்ஷேத்ரஜ்ஞச்ச அதிதைவதம்
அஹம் க்ருதிஸ்த அத்யாத்மம் அபிமாந: அதிபூதகம்

**பொருள்** - புத்தி என்னும் கண்ணாடி மாளிகையின் அதிபதி தேவதையாக ஆத்மா உள்ளது. அடுத்து அஹங்காரம் என்பதை எடுத்துக்கொண்டால், அபிமானம் (என்னுடையது என்னும் எண்ணம்) என்பது அதன் இயல்பாக உள்ளது.

7-34 அதிதைவதமதோ ருத்ரோ மந: அத்யாத்மம் ப்ரகீர்த்திதம்
விகல்ப: அப்யதிபூதஸ்து சந்த்ரமா அதிதைவதம்

**பொருள்** - அஹங்காரத்தின் அதிபதி தேவதையாக ருத்ரனைக் கொள்ளவேண்டும். அடுத்து மனம் என்பதை எடுத்துக்கொண்டால் விகல்பம் என்பதை அதன் இயல்பாகவும், சந்த்ரனை அதிபதியாகவும் கொள்ளவேண்டும்.

7-35 ப்ராண ஸம்ரம்ப ஸங்கல்பா குண ஏஷாம் க்ரியா விதௌ
ப்ராண: ப்ரயத்ந இத்யுக்த: ஸம்ரம்போ கர்வ உச்யதே

**பொருள்** - செயல்கள் நடைபெறும்போது புத்தி, அஹங்காரம் மற்றும் மனம் ஆகியவற்றின் தன்மைகளாக ப்ராணன், ஸம்ரம்பம் மற்றும் ஸங்கல்பம் ஆகியவை உள்ளன. இதில் ப்ராணன் என்பது ப்ரயத்னம் (முயற்சி) என்றும், ஸம்ரம்பம் என்பது கர்வம் என்றும் கூறப்படும்.

**விளக்கம்** – புத்தி, அஹங்காரம் மற்றும் மனம் ஆகியவற்றுக்கு இரண்டு தன்மைகள் உள்ளன. புத்தி என்பது முடிவு செய்தல் மற்றும் செயல் புரிதல் (இது ப்ராணன் எனப்பட்டது) ஆகிய இரண்டையும் செய்வதாகும். அஹங்காரம் என்பது “எனது, நான்” போன்ற சிந்தனை மற்றும் கர்வம் கொள்வதாகும். மனம் என்பது ”எது சரி, எது தவறு” என்று ஆராய்வதுடன் முடிவு எடுப்பதும் ஆகும்.

7-36 பல ஸ்வாம்ய ஸ்வரூபச்ச கர்வ: ஸம்ரம்ப உச்யதே
ஔதாஸீந்யச்யுதி: ப்ரோக்த: ஸங்கல்போ மாநஸோ புதை:

**பொருள்** - கர்வம் என்பது தனது செயல்களுக்கான பலன்கள் தன்னுடையதே (பலன் விளையத்தானே காரணம் என்று எண்ணுவது எனவும் கொள்ளலாம்) என்ற எண்ணமாகும். இதுவே ஸம்ரம்பம் என்றும் கூறப்படுகிறது. ஒன்றைக் குறித்து அறிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் (அதனை அறியவேண்டும் என்ற எண்ணம் இல்லாமை = உதாஸீனப்படுத்துதல்; இந்தத் தன்மை நீங்குதல்) என்பதே ஸங்கல்பம் என்று அறிஞர்களால் கூறப்படுகிறது. இது மனதின் தன்மையாகும்.

7-37 வ்யாக்யாதேயம் த்விதீயா மே ஹி அந்தகரணிகீ தசா
ப்ரச்யவந்தீ ததோ ரூபாதாந்த:கரணிகாதஹம்

**பொருள்** - இப்படியாக அந்தகரணியாக உள்ள எனது இரண்டாவது நிலை பற்றிக் கூறினேன். இந்த நிலையை விட்டு நான் எனது அடுத்த நிலையை எடுத்துக்கொள்கிறேன்.

7-38 ஸத்யாநதாம் க்ரமச: ப்ராப்தா பஹிஷ்கரண ஸஜ்ஞிதா
கரணாநி து பாஹ்யாநி வ்யாக்யாதாநி மயா புரா

**பொருள்** - இந்த நிலையில் நான் ஸ்தூல வடிவம் எடுக்கிறேன். இந்நிலையில் நான் புலன்கள் என்று பெயர் பெறுகிறேன். இவற்றை நான் முன்பே கூறிவிட்டேன் (மனம், புத்தி போன்றவையாக உள்ள மஹாலக்ஷ்மி அடுத்து புலன்களாக அமைகிறாள் என்று கருத்து).

7-39 ஞானேந்த்ரிய ப்ரவ்ருத்தௌ து மந ஆதி ப்ரவர்த்ததே
சக்ஷு: ஆலோக்யத்யர்த்தம் விகல்பயதி தந்மந:

**பொருள் -** பல்வேறு புலன்கள் மூலமாக மனமே செயல்படுகிறது. இவற்றின் ஆதியாக மனமே உள்ளது. உதாரணமாகக் கண்கள் ஒரு பொருளைக் காணும்போது, அந்தப் பொருளைக் குறித்த ஆய்வை மனமானது செய்து, ஒரு முடிவுக்கு வருகிறது.

7-40 ஆலோகந விகல்பஸ்தம் அஹங்கார: அபிமந்யதே
அத்யவஸ்ய ததோ புத்தி: க்ஷேத்ரஜ்ஞாய ப்ரயச்சதி

**பொருள் -** இப்படியாகப் புலன்கள் மூலம் உணரப்பட்ட ஒரு பொருளைப் பற்றிய முடிவுக்கு வருகின்ற மனமானது, அதனை அஹங்காரம் மூலமாக ஆத்மாவிற்கு உணர்த்துகிறது. அதன் பின்னர் அந்தப் பொருளைச் சரியானபடி பகுத்தறிகின்ற புத்தியானது, அதனைப் பற்றி ஆத்மாவிற்கு உணர்த்துகிறது.

7-41 கர்மேந்த்ரிய ப்ரவ்ருத்தௌ து விபர்யஸ்த: க்ரம: ஸ்ம்ருத:
ஸங்கல்பாதே: பராசீநா வசநாதிக்ரியா யத:

**பொருள் -** மேலே கூறப்பட்ட வரிசையானது கர்மேந்த்ரியங்களைப் பொறுத்தவரையில் தலைகீழாக மாறுகிறது. இதன் காரணம், ஸங்கல்பம் (உறுதியான முடிவு) போன்றவற்றை எடுத்த பின்னர் அல்லவோ பேச்சு முதலானவை வெளிப்படுகிறது?

7-42 அத்யாத்ம அதிவிசேஷ: அத்ர ஸர்வ: பூர்வமுதீரித:
த்ருதீயேயம் விதாக்யாதா பஹிஷ்கரணவர்த்திநீ

**பொருள் -** இது தவிர அத்யாத்மம் போன்ற பலவற்றைப் பற்றி முன்பே கூறியாகிவிட்டது. இப்படியாக என்னுடைய மூன்றாவது நிலைப்பாடு என்பது கர்மேந்த்ரியங்கள் மூலம் உணர்த்தப்பட்டது.

7-43 சதுர்த்திம் த்வமிமாம் கோடிம் மேயரூபாம் து மே ச்ருணு
மேயம் து த்விதம் தாவத் பஹிரந்தர் வ்யவஸ்தயா

**பொருள் -** அடுத்து புலன்கள் (இந்த்ரியங்கள்) மூலமாக அறியப்படும் பொருளாக உள்ள எனது நான்காவது நிலையைப் பற்றிக் கேட்பாயாக. இத்தகைய பொருள்கள் - உட்பொருட்கள் மற்றும் வெளிப்பொருள்கள் என்று இரண்டு வகைப்படும்.

7-44 பாஹ்யம் து நீலபூதாதி ஸுகதுக்காதி அந்தரம்
ஆபிச்சதஸ்ருபிச்வாஹம் விதாபி: ஸ்த்யாநதாம் கதா

**பொருள்** - வெளிப்பொருட்கள் என்பது நீலம், மஞ்சள் போன்றவை ஆகும். உட்பொருள்கள் என்பது சுக துக்கங்கள் போன்றவை ஆகும். இந்த நான்கு நிலைகளிலும் நான் ஸ்தூலமாக உள்ளேன்.

7-45 ஸ்வசித்தோத்த விகல்பார்த்தை: ப்ரத்யக்ஷாப்யஸ்மி விஸ்ம்ருதா
ஸதாசார்ய உபதேசேந ஸத்தகர்மநுருந்ததா
7-46 நிரூப்யே நிபுணைர்யத்ர மேயே அபி அஸ்மி ததா ஸ்புடம்
விலாப்ய ஸகலம் பாவம் சேத்யரூபம் இமம் ததா

**பொருள்** - உபாஸகனின் மனதில் எற்படும் விளைவுகள் காரணமாக ஒரு சிலர் என்னைக் காணக்கூடும். ஆயினும் எனது தன்மைகளை அவர்கள் முழுவதுமாக உணர்ந்து கொண்டு என்னை அறிவதில்லை. அந்த நிலையில் அவர்கள் ஓர் ஆசார்யனின் உபதேசம் பெறுகின்றனர். அதன் பின்னர் அந்தப் புத்திமான்கள் நான் அனைத்திலும் வ்யாபித்துள்ளதை உணர்கின்றனர்.

7-47 ஸ்வச்சந்தா பூர்ணசித்ருபா ப்ரகாச: அஹம் ததா ஸ்வயம்
ஸ்வச்சா ஸ்வச்சதரா ஸாஹம் தத: கரண ஸம்ஜ்ஞிதா

**பொருள்** - அதன் பின்னர் நான் என்னை முழுமையாகவும், ப்ரகாசமாகவும், தூய்மையாகவும், அனைத்தைக் காட்டிலும் தூய்மையாகவும் வெளிப்படுத்திக் கொள்கிறேன். இப்படியான என்னைக் காரணப்பொருள் என்றே கொள்கின்றனர்.

7-48 ஆரோஹம் அவரோஹம் ச பாவயந்மாமகாவுபௌ
மச்சித்தோ மத்கதப்ராணோ மத்பாவாயோபபத்யதே

**பொருள்** - இதன் பின்னர் நான் மேலும் என்னை வெளிப்படுத்திக் கொள்பவளாக, உபாஸகனின் சித்தத்தில் உள்ளேன். இப்படியாக எனது இறங்கும் மற்றும் ஏறும் நிலைகளை உணர்ந்த உபாஸகன், தனது சித்தம் முழுவதையும் என்னில் வைக்கிறான். தனது வாழ்க்கையை எனக்கு அர்ப்பணித்து, எனது நிலையை அடைகிறான்.

ஏழாம் அத்யாயம் ஸம்பூர்ணம்